நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்.

யோவேல் 2 : 13



## தவக்காலம் - 2013

## தூய பவுல் திருத்தலம்

## சிங்கம்பாறை

இறை இயேசுவில் அன்பானவர்களே,

வணக்கமும், செபமும்.

தவக்காலம் என்பது இறைவனின் பேரன்பையும், இரக்கத்தையும் உணர்ந்து, மனமாற்றமடைந்தவர்களாய் கடவுளிடம் திரும்பி வரும் காலம். நாம் இறைவனோடு கொண்டுள்ள ஒப்புரவின் மாண்பை, உடன் வாழும் மனிதர்களோடு பகிரும் காலம். இறைவேண்டல், நோன்பு, அறச்செயல்கள் மூலம் நாமும், நம் குடும்பமும், நம் இறைச்சமூகமும் மாற்றத்தை நோக்கி மலரும் காலம். எனவே கடவுளின் கொடையாம் இத்தவக்காலத்தில் முழு மனிதனாக மாற முயல்வோம். வழிபாட்டில் இணைவோம். இறை மனித உறவில் வளர்வோம்.

**மாறுவோம்! மன்னிப்போம்!! மகிழ்வோம்!!!**

என்றும் பாசமுடன்

அருட்திரு. செயபாலன், அ.

திருத்தல அதிபர், சிங்கம்பாறை.

## தவக்கால நடைபயணம்

| | | | |
|---|---|---|---|
| 22-02-2013 | வெள்ளி | மாலை 4:30 | செபஸ்தியார்புரம் |
| 24-02-2013 | ஞாயிறு | மாலை 4:30 | ஓடைமறிச்சான் |
| 01-03-2013 | வெள்ளி | மாலை 4:30 | பாப்பாக்குடி |
| 03-03-2013 | ஞாயிறு | மதியம் 3.00 | கல்லிடைக்குறிச்சி |
| 07-03-2013 | வியாழன் | மாலை 6:00 | சிங்கம்பாறை |
| 10-03-2013 | ஞாயிறு | மாலை 5:00 | தாளார்குளம் |
| 15-03-2013 | வெள்ளி | மாலை 5:00 | இலந்தைகுளம் |
| 22-03-2013 | வெள்ளி | மாலை 5:30 | மைலப்புரம் |

## தவக்கால திருப்பயணம்

நாள் 08-03-2013 – 09-03-2013

(வியாழன் இரவு முதல் சனி இரவு வரை)

கட்டணம்: ரூ. 700

இடங்கள்:

1. தூய மழைமலை மாதா திருத்தலம், அச்சிறுப்பாக்கம்.
2. தூய வில்லியனூர் மாதா திருத்தலம்.
3. தூய திரு இருதய பேராலயம், பாண்டிச்சேரி.
4. தூய ஆரோக்கிய மாதா பசிலிக்கா, வேளாங்கண்ணி.
5. தூய அருளானந்தர் திருத்தலம், ஓரியூர்.

## மறைமாவட்டத் திருப்பயணம்

நாள்: 17-03-2013 ஞாயிறு மதியம் 1:00 மணி

இடம்: தூய லூர்து மாதா திருத்தலம், மலைக்கோவில், திருமலாபுரம்.

கட்டணம் : ரூ. 100.

## குருத்து ஞாயிறு

நாள் : 24-03-2013 காலை 7:00 மணி

இடம் : மைலப்புரத்திலிருந்து சிங்கம்பாறை

மாலை: 5:30 மணி தாளார்குளம்

மாலை: 7:00 மணி இலந்தைகுளம்

## புனித வியாழன் : 28-03-2013

மாலை 6:30 மணி சிங்கம்பாறை, தாளார்குளம்

## புனித வெள்ளி : 29-03-2013

மாலை 5:00 மணி சிங்கம்பாறை, தாளார்குளம்

## உயிர்ப்பு ஞாயிறு : 30-03-2013

இரவு 11:00 மணி சிங்கம்பாறை, தாளார்குளம்

## 31-03-2-13 ஞாயிறு

காலை 8:00 மணி சிங்கம்பாறை

## நினைவில் கொள்க:

- திருநீற்றுப்புதன், புனித வெள்ளி ஆகிய நாட்களில் சுத்த போசனமும், ஒரு சந்தியும் அனுசரிக்க வேண்டும்.
- இறைவேண்டல், நோன்பு, அறச்செயல்கள் வாழ்வில் மையம் பெறட்டும்.
- ஒப்புரவு அருளடையாளம் அடிக்கடி பெறுவது ஆன்மீக வாழ்வை வளப்படுத்தும்.
- புனித வியாழன் அன்று பசி, பிணி ஒழிப்புக்கான சிறப்புக் காணிக்கையும், புனித வெள்ளி அன்று புனித நாடுகள் பராமரிப்புக் காணிக்கையும் எடுக்கப்படும்.
- இறைச்சி உண்பது, மது அருந்துவது மற்றும் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து, அந்த தொகையை புனித வியாழன் திருப்பலி அன்று காணிக்கையாகக் கொடுக்கலாம்.

**இனிய உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!**

“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” யோவான் 11 : 25.